(பிரத்தியேக விநியோகத்திற்கு மட்டும்)

# எழுச்சி

அரசாங்க எழுது வினைஞர் சங்கம்
62, 1/5, குமாரன் இரத்தினம் வீதி, கொழும்பு. 2.

எழுச்சி: 1. | திருவள்ளுவராண்டு 1993—மாசி—பங்குனித் திங்கள் | இதழ்; 2-3.

## அரசாங்கத்திற்கு எதிராக வழக்கு!

### அறிவித்தல் கொடுபட்டது.

**30 நாட்களின் பின் வழக்குத் தொடரப்படும்.**

அரசாங்க எழுது வினைஞர் சங்கம் அரசாங்க சேவையிலுள்ள தமிழ் ஊழியர்களது சேவை நிபந்தனைகளை ஒருதலைப்பட்சமான முறையில் அரசாங்கம் மாற்றியதற்கு எதிராக நீதி மன்றத்தில் விரைவில் வழக்குத் தொடர இருக்கிறது.

இதற்குப் பூர்வாங்க நடவடிக்கையாக அற்றணி ஜெனரல், திறைச்சேரிச் செயலாளர் ஆகிய இருவருக்கும் அறிவித்தல் கொடுக்கப்பட்டுவிட்டது. இவற்றின் வாசகம் கீழே தரப்பட்டுள்ளது.

சங்கத்தின் சார்பாக பிரபல வழக்கறிஞரும், முன்னாள் சொலிசிட்டர் ஜெனறலுமான திரு. எம். திருச்செல்வம் Q. C. வாதாடுவார்.

சிங்களமொழியில் தேர்ச்சி பெறாமையால் 55 வயதுக்கு மேல் சேவை நீடிப்பு மறுக்கப்பட்டவர்களும், ஊதிய உயர்வு மறுக்கப்பட்டவர்களும் உடனடியாகச் சங்கத்தோடு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

Hamilton Shirley Amarsinghe Esqr
Secretary to the Treasury,
Colombo. 20th, March, 1962.

Take notice that the ARASANKA ELUTHU VINAIGNAR SANKAM of 62 1/5, Kumaran Ratnam Road, Colombo 2 is about to institute an action against you as Secretary to the Treasury for a declaration that Treasury Circular No. 555 of the 31st October, 1961 is illegal and or ultra vires your powers and of no force or avail in law and further that it is discriminatory of those public officers who are not familiar with the Sinhala Language and makes members of the said Arasanka Eluthuvinaignar Sankam liable to disabilities which Sinhalese speaking members of the public service are not liable to.

The plaint will also allege that the directive given in the said Treasury Circular that, extension of service beyond the age of 55 should be granted only to those officers who are able to carry out their day to day duties in the Sinhala Language, is contrary to law.

Yours faithfully,

Sgd. K. Sivanandasundaram
President and Trustee.

Sgd. R. Balasubramaniam
Honorary General Secretary and Trustee.

Sgd. S. Tharmaligam
Honorary Treasurer and Trustee.

(மறு பக்கம் பார்க்க)

Honourable the Attorney General,
Colombo. 10th, April, 1962.

Take notice that the Arasanka Eluthuvinaignar Sankam (a duly registered Trade Union) having its registered office at 62 1/5, Kumaran Ratnam Road, Colombo 2 is about to institute an action against you as representing the Crown for a declaration that Treasury Circular No. 560 of 4th December, 1961 is illegal and of no force or avail in law and further that the Sinhala Only Act No 33 of 1956 is discriminatory as it makes members of the Tamil Speaking community liable to disabilities to which persons of the Sinhalese speaking Community are not made liable to and thereby imposes disabilities on the members of the Arasanka Eluthuvinaignar Sankam.

Yours faithfully,

Sgd. K. Sivanandasundaram
President and Trustee

Sgd. R. Balasubramaniam
Honorary General Secretaryand Trustee.

Sgd. S. Tharmalingam
Honorary Treasurer and Trustee.

எழுச்சியின் முதல் இதழைத் தொடர்ந்து, இரண்டாவது இதழ் மலர்ந்துள்ளது.

பல வசதியீனங்கள், தொல்லைகள் இவற்றிற்கு மத்தியில் எழுச்சியை ஒழுங்காக வெளியிட எல்லாவித முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

எழுச்சியின் முதல் இதழ் சிறப்பாகவும் தரமாகவும் அமைந்துள்ளதாக பலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். அவர்களுக்கு எங்கள் நன்றி இந்த இதழ் முன்னதைவிட சிறப்பாக அமைந்துள்ளது என்பது எங்கள் எண்ணம். உங்கள் எண்ணங்களை எழுதி அனுப்புங்கள்.

எழுச்சி மேலும் வனப்போடும் பொலிவோடும் வெளிவர உதவும் ஆலோசனைகள் பெரிதும் வரவேற்கப்படும்.

# வணக்கம்!

இந்த இதழில் கலாநிதி கணேசலிங்கம் அவர்களுடைய தொடர்கட்டுரை இடம் பெறுகிறது. வரும் காலம் பெரியகேள்விக்குறியாக மாறிவிட்டிருக்கும் இன்றைய சூழ்நிலையில், அதை எப்படி ஆச்சரிய குறியாக மாற்றலாம், மாற்றமுடியும், என்பதற்குரிய வழிவகைகளை ஆதாரத்தோடு சாங்கோபாங்கமாக தனக்கே உரிய நடையில் அலசி ஆராய்ந்து இருக்கிறார்.

இந்த நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு தொழில் வளம் எவ்வளவு முக்கியம் என்பதை நாம் முன் எப்பொழுதும் இல்லாத அளவிலும் வகையிலும் உணர்ந்து இருக்கிறோம், தமிழ் மக்களுடைய கவனம் பொருளாதாரத் துறையில் சூழ்நிலை காரணமாக இன்று திருப்பப்பட்டுள்ளது.

இந்நிலையில் தமிழ் பகுதிகளில் தொழில் அபிவிருத்திக்குரிய வாய்ப்புகள் யாவை? அவ்வித தொழில் அபிவிருத்திக்கு வேண்டிய நிலவளம், நீர்வளம், கனிவளம் இருக்கிறதா? மக்கள் பலம், தொழில் நுட்பம், சந்தை வசதி உண்டோ? இன்னோரன்ன கேள்விகளுக்கு விடையளிக்கிறார் தொழில் துறையில் பரந்த அறிவும் அனுபவமும் வாய்ந்த கலாநிதி சுந்தரலிங்கம் அவர்கள் - இந்த இதழில் இடம் பெறும் கைத்தொழில் என்னும் தொடர் கட்டுரை மூலம்.

தமிழ்த்தாயின் அறிவுச் செல்வங்களான இவ் இரண்டு ‘லிங்கங்களின்’ கட்டுரைகளை மிக்க கருத்தோடு படித்துப் பயன் பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பொதுவாகவே எழுச்சியை வெறும் பொழுது போக்குக் கண்ணோடு படிக்காமல் கருத்தோடு படிக்கிறீர்கள், படிப்பீர்கள் என்று நம்புகிறோம்.

மிக்க அன்புடன்
**ஆசிரியர்**

## செயலாளரின் குறிப்புகள்

1961-ம் ஆண்டு நடைபெற்ற நிறைவேற்று வகுப்பு தரம் II க்குரிய வகுப்பேற்றுத் தேர்வுக்காக உறுப்பினர்களுக்குச் சங்கத்தின் ஆதரவில் வகுப்புக்கள் நடாத்தப்பட்டன. அலுவலக நடைமுறைகள் பற்றி கலாநிதி வி. கணேசலிங்கம் அவர்களும், கணக்கியல் பற்றி திரு. ம. சரவணமுத்து அவர்களும் விரிவுரைகளாற்றினர். இவ்விரிவுரைகளின் குறிப்புகளும் வினாவிடைகளும் உறுப்பினர்களுக்கு வினியோகிக்கப்பட்டன.

தமிழ் பாடசாலைகளில் கட்டாயத்துணை மொழியாகச் சிங்களத்தைச் சிபார்சுசெய்ய தேசியகல்வி ஆணைக்குழு முடிவுசெய்ததை எதிர்த்து அம்முடிவு பாரபட்சமானதென்றும், சங்க உறுப்பினர்கள் எக்காரணங் கொண்டும் தங்கள் பிள்ளைகளைச் சிங்கள மொழி கற்க விடமாட்டார்களென்றும் இம்முடிவைச் செயல் படுத்த வேண்டாமென்றும், ஓர் தீர்மானம் 24-11-61ல் நிறைவேற்றப்பட்டுக் கல்வி அமைச்சருக்கு அனுப்பப்பட்டது. இது பற்றித் தொடர்ந்து நடைபெற்ற கடிதப்போக்கு வாரத்தினிறுதியில் எமது கோரிக்கைபற்றி உரிய

11—ம் பக்கம் பார்க்க

# நாம் இனி வாழும் வழி என்ன?

கலாநிதி வ. கணேசலிங்கம், M.Sc. Ph.D.

( சென்ற இதழ் தொடர்ச்சி )

சென்ற இதழில் வெளிவந்த இக்கட்டுரையின் முதற் பாகத்தில் இலங்கைத் தமிழரின் பொருளாதாரத்தில் இப்போதுள்ள சீர்கேடான நிலைமையையும் அரசாங்க ஊழியர்களாகிய எங்களது கடமையையும் சுருக்கமாக விளக்கினேன். முன்பு கூறியவற்றுள் ஒரு கருத்தை வற்புறுத்தும் பொருட்டு இங்கும் கூறுவது அவசியமாகின்றது. அதாவது, பொருளாக்கம், வருவாய்ப் பெருக்கம் ஆகிய இவற்றை முயற்சிக்குமுன் பொருட்பேணல் சிக்கன வாழ்வு முதலியவற்றிற்கு வழி வகுத்துக்கொள்ள வேண்டியது. இப்போதைய சூழ்நிலையில் முதன்முதலாகக் கைக்கொள்ள வேண்டிய உபாயம் இதுவாகும். எங்கள் நிலைமை இதற்கு மேலும் சீர்கெட்டுப் போகாமல் இருப்பதற்கு நம் முன்னோரும் நாமும் வகுத்துள்ள பொருளாதார அடிப்படையாகிய ஆதனங்கள், முயற்சிப்படுகின்ற மூலதனம், நம்முள் பலரால் எதிர்க்கப்படும் வழக்கத்திற் கிணங்கியதாயினும் நம் குடும்பப் பொருளாதாரத்தின் பழமைவாய்ந்த உபாயமாகிய சீதனம், என்பனவற்றை நம் உயிர்நாடியெனப் பேணுதல் அவசியம். இவைகளில் இருந்து கிடைக்கும் வருவாயை மாத்திரமே, தேவைப்படின், நம் நாளந்த வாழ்க்கைச் செலவுக்காகப் பயன் படுத்துவதால் இம்மூலதனத்தைச் சிதைவுபடாமல் காப்பாற்ற முடியும்.

இதனோடு இணைந்த இன்னொரு விடயத்தையும் இங்கு குறிப்பிடலாம். வெளியூர்களில் வாழுபவர்கள் தங்கள் வருவாயில் குறைவு தீர்க்கும்பொருட்டு தாயகங்களில் இருந்து பணம் பெருமளவில் தருவித்துச் செலவு செய்வதினால் தமிழ்ப் பிரதேசங்கள் செல்வமிழந்து சீர்கெட்டுப்போக நேரிடும். ஆகையால் எங்களை எதிர்த்துள்ள பொருளாதார நிலைமை நீடிக்கும்வரையிலாவது வெளியூர்களில் வசிக்கும் நாங்கள் எங்கள் இப்போதையவருவாய்க்கு உட்படும் வகையில் வாழ்க்கைச் செலவினங்களைத் திருத்தியமைத்தல் வேண்டும்.

எங்கள் வாழ்க்கையின் அநேக வழக்கங்கள், அவைகள் தோன்றிய காலத்துப் பண்பாட்டிற்கும் பொருளாதார நிலைமைக்கும் உகந்தனவாயிருந்தன வெனினும் இன்றைய பொருளாதார நிலைமையில் இன்றியமையாதனவல்ல. உதாரணமாக, எங்கள் வீடுகளில் பணிசெய்வதற்காக வேலைக்காரர்களை அமர்த்தும் வழக்கத்தைக் குறிப்பிடலாம். நாமே செய்யக்கூடிய, செய்ய வேண்டிய, வேலைகளைச் செய்வதற்கு பிறரை வேலைக்கமர்த்துவதனால் அல்லது ஏவுவதனால் பணச்செலவும், ஓரளவில், பொருட் சேதமும் ஏற்படலாம். இவ்வழக்கம் மான்மிய முறைமையின் (feudal system) அம்சமாகத் தோன்றியிருக்கலாம், இக்காலத்திற்கு அவசியமாகத் தோன்றவில்லை. சிக்கன வாழ்வுக்கேற்ற புது வழக்கங்கள் எங்கு தோன்றியவையென்றாலும் அவைகள் நம்மால் பாராட்டிக் கைக்கொள்ளக்கூடியனவாய் இருக்கலாம்.

சில ஐரோப்பிய நாடுகளிலும் வழங்கிவரும் ''உனக்கு வேண்டியவைகளை நீயாகவே செய்து கொள்'' (Do it yourself) என்பது இரண்டாவது உலகயுத்தத்திற்குப் பின் அங்கு தோன்றிய சிக்கன வாழ்வின் அம்சங்களில் ஒன்றாகும். நாம் பின்பற்றிப் பயனடையக்கூடிய இத்தகைய வழக்கங்கள் அனேகம் மேல் நாட்டவர்களிடம் உண்டு, அவர்களின் கால வண்ணம் (Fashion) முதலிய இடாம்பீகவாழ்க்கைக்கு ஏதுவானவைகளைப் பின்பற்றும் நாங்கள் மேற்கூறிய நல் வழக்கங்களை ஏன் ஏற்றுக்கொள்ளக் கூடாது?

இதுகாறும் கூறப்பட்டவை சிக்கன வாழ்க்கையையும் பொருட் பேணலையும் பற்றியனவாகும். அடுத்ததாகப் பொருளாக்கம், வருவாய்ப் பெருக்கம், ஆகியவற்றைச் சிறிது விளக்குவோம். எங்கள் வாழ்க்கை அனேக இன்னல்கள் சூழ்ந்ததாயிருப்பினும் அதனைச் சீர்ப்படுத்துவதற்கு வேண்டிய திறன் விடாமுயற்சி முதலிய பண்புகள் எங்கள் மரபுக்கு புதிதானவையல்ல. நாம் முன்பு கூறியது போல் பழைய புகழையும் தீரத்தையும் பாடுவதில் பயனில்லையென்றாலும், எங்களைத் திடசித்தமுள்ளவர்களாக்கவும் எங்கள் முயற்சியில் ஊக்குவிக்கவும் நம் முன்னோரின் பண்புகளைப் பற்றிக் குறிப்பிட வேண்டியிருக்கின்றது. நம் முன்னோர்களின் சாதனைகளையும் அவர்கள் செல்வமீட்டிய வழிகளையும் உற்று நோக்குவோமாயின் இப்போது எங்களை அடிமை கொண்டுள்ள தோல்வி மனப்பான்மை, காலத்தோடு மிதந்து செல்வதே வழி என்ற தத்துவம் முதலியன எங்களை இடையிலே பீடித்துள்ள தொற்று நோய்கள் போன்றன என்பது தெளிவாகும். இதை இன்னொரு வழி கூறின், எங்கள் சமூகத்தினரிடம் இப்போதுள்ள வாழ்க்கைப்போக்கும் மனப்

5-ம் பக்கம் பார்க்க

# கைத்தொழில்

கலாநிதி ஆ. சுந்தரலிங்கம்

(அதிபர். இலங்கை கைத்தொழில் நிலையம்)

(சென்ற ஆண்டு முற்பகுதியில் ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம்)

உலகமெங்கும், அதிக முன்னேற்றம்அடைந்திராதநாடுகள், கைத்தொழில் மயத்தில் இறங்குவதை நாம் இன்று காண்கின்றோம். இந்நாடுகள் கமத்தொழிலில் அதிகம் ஈடுபடாது கைத்தொழிலிலேயே அதிக ஊக்கம் செலுத்துகின்றன. இதற்குப் பல காரணங்கள் உண்டு. கமம் செய்வதற்கு நிலமும் நீரும் முதன்மையாகத் தேவைப்படுகின்றன. அதிகமான நிலமுண்டாயின் அங்கு கமம் செய்யலாம்; அதற்குப் பெருவாரியான நீரும் தேவைப்படும். வான் பயிர் யாவும் மழையில் தங்கியுள்ளன வென்பதை நாம் அறிவோம். மழையில்லாவிட்டால் அவை அழிந்து போகும். அதனால் பயிர் வளர்ச்சி மனித வல்லமையில் மட்டும் தங்கியிருப்பதில்லை. இயற்கையின் செயல்களிலும் தங்கியுள்ளது. ஆனால் கைத்தொழிலோ முற்றிலும் மனித வல்லமையில் தங்கியுள்ளது. மனிதன் எவ்வளவுக்கு தன் அறிவை, வல்லமையை, திறனை பயன்படுத்துகின்றானோ அவ்வளவுக்கு அவன் கைத்தொழிலில் முன்னேற்றம் அடைகின்றான். அதன் பயனாய் நாட்டின் பொருளாதாரமும் விருத்தியடைகிறது. ஆகையால் ஒரு நாட்டின் விருத்திக்குக் கைத்தொழில் மயம் அவசியமாகின்றது. அதுவும் விரைவில் நிகழ்தல்வேண்டும். இப்போது நான் கைத்தொழிலைப் பற்றிப் பொதுப்படையாகக் கூறிய பின்னர் அடுத்துவரும் கட்டுரைகளில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்குஏற்ற கைத்தொழில்களை ஆராய்வேன். இலங்கையின் மூலவளங்கள், அடிப்படைத் தேவைகள், இலங்கை மக்களிடையே பெறக்கூடிய கைத்தொழில் சம்பந்தமான அறிவு, இலங்கைக்குப் பொருத்தமான பெரிய அளவுக் கைத்தொழிலும், குடிசைக் கைத்தொழிலும் இக்கைத்தொழிலில் எவற்றில் முன்னதாக ஈடுபடல் வேண்டும் என்னும் பல விடயங்களையும் பின்னர் தனித்தனியே விரிவாக ஆராய்வேன்.

ஒரு நாட்டின் பொருளாதார விருத்தியென்றால் என்ன? என்பதை ஆராய்வோம். அதாவது அந்நாட்டில் கூடுதலான மூலதனத்தை, அல்லது கூடுதலான மனிதபலத்தை அல்லது அந்நாட்டின் இயற்கைவளங்களைக் கூடுதலாகப் பயன்படுத்துதல் என்பதாம். இவையாவையும் ஒரு மிக்க கூடுதலாகப் பயன்படுத்த முடியாவிடில் இவற்றில் ஒன்றையேனும் கூடுதலாகப் பயன்படுத்துதல் என்பது அதன் கருத்தாகும். இவ்வாறு செய்வதற்குக் காரணம் என்னவென்றால் நாட்டு மக்களின்ஆள்வீத வருமானத்தை ஏற்றுவதற்கேயாம். கடந்த காலங்களில் இலங்கையில் முதற்படியான உற்பத்திகளில் மாத்திரம் முயற்சி செய்யப்பட்டது. எங்கள் பொருளாதாரமும் முதற்படியான பொருள்களை ஏற்றுமதி செய்து பெற்ற வருமானமாகும். இரண்டாம்படியான உற்பத்திக் கைத்தொழில்கள் இருக்கவில்லை; சில அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் இருப்பினும் கைத்தொழிற் பகுதிக்கு இன்று தேவையான விரைவான அபிவிருத்தியைக் கொண்டு நடத்துவதற்கு அவை போதுமானவையல்ல.

ஒரு நாடு கைத்தொழில் விருத்தியடைவதற்கு என்ன, என்ன வேண்டும் என ஆராய்வோம். ஒரு திட்டம் வகுத்து அதன்படி அபிவிருத்தி வேலைகளைச்செய்வதற்கு என்னவேண்டும்? ஏற்றுமதி இறக்குமதி ஆகிய இவ்விரண்டிற்கும் வேண்டிய வசதிகள், எம் நாட்டிலும் மேலாக முன்னேறியுள்ள நாடுகளினின்றும் தேவையான அறிவையும் தொழில் நுட்பத்திறனையும் பெறுதல்; எல்லாவற்றிற்கும் மேலாக போதியளவு பணம் ஆகியனவேண்டும். பொதுவாக உற்பத்தி சம்பந்தமான முயற்சிகளில், மூலதனத்துக்குப் பதிலாக வேலையையும் வேலைக்குப்பதிலாக மூலதனத்தையும் ஓரளவு கொண்டு நடத்தலாமெனச் சொல்லலாம். போதியளவு மலிவில்வேலைபெறக்கூடிய நாடுகள், மூலதனத்தைக் குறைத்தும் வேலையைக் கூட்டியும் தங்கள் தொழில் நுட்பங்களை மலர்விக்கலாம். என்றாலும் இந்த முறையில் பலவற்றைச்சாதிக்க முடியாது. செய்யக்கூடியவையும் ஓரெல்லைக்கு உட்பட்டவை. விசேடமாக திருத்தமுள்ள இன்றைய கல்வித்தரத்தினால் வாழ்க்கைத்தரமும் உயர்ந்துள்ளது. அதனால் இத்தகைய வாழ்க்கைக்குக் கூடுதலான வருமானம் வேண்டும். குறைந்த கூலி கொண்டு இவ்வாழ்க்கை நடத்த முடியாது. இது காரணமாய் அபிவிருத்தி அடையும் நாடுகளுக்குக் கூடுதலானமுதல் வேண்டும் என்னும் கொள்கையே நாம் ஏற்கவேண்டும்.

அபிவிருத்தி குறைந்த எந்நாடாவது முன்னேற வேண்டுமாயின் அந்நாடு ஒரு கைத்தொழில் நாடாவதற்கு முயலவேண்டும். அந்நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களில் கைத்தொழில்மயத் திட்டம் முதன்மையான இடத்தைப் பெறவேண்டும். இந்த உண்மையைப் பொதுவாக எல்லா நாடுகளும் ஏற்றிருக்கின்றன. கூட்டு வளர்ச்சி என்னும் கொள்கை கைத்தொழிலுக்கே பொருத்தமானது; அதாவது ஒரு கைத்தொழில் நிலையத்தில் வேலை செய்கிறவன் ஒரு கமக்காரன் பெறக்கூடியதிலும் பார்க்கக் கூடுதலான வருமானம் பெறுகின்றான். அக் கைத்தொழிலில் உற்பத்திசெய்யும் பொருள்களையும் வாங்கி உபயோகிக்கின்றான்.

(9 –ம் பக்கம் பார்க்க)

## நாம் இனி வாழும்..

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பான்மையும் பெருமளவில் எங்கள் தெற்கயலவர்களைப் பார்த்துப் பழகிக் கொண்டனவேயல்லாமல் எங்கள் மரபோடு உதித்தவையல்ல எனலாம். எம் முன்னோரின் பழைய பண்பாடுகளில் அனேகம் தாயகங்களில் வசிக்கும் எங்கள் சகோதரர்களிடையே இப்போதும் நிலவி வருகின்றன. இவைகளில் பெரும்பாலானவை அவர்களின் கமத் தொழில், வீட்டுப் பொருளாதாரம் ஆகியன சம்பந்தப் பட்டவைகள் எனலாம். இது நான் மாத்திரம் கூறும் கருத்தல்ல. மேலைத் தேசத்தினர் கூட இதனை உற்றுணர்ந்திருக்கிறார்கள். உதாரணமாக, யாழ்ப்பாணத்தின் கமத் தொழிற் செய்கைமுறைகளையும், நில வளத்தைப் பேணும் உபாயங்களைப் பற்றியும் கேம்பிறிச்சு பல்கலைக் கழகத்தின் சிரேட்ட புவியியல் விரிவுரையாளர், பி. எச். பாமர் (B. H. Farmer) கூறியுள்ளதை குறிப்பிடலாம்.

"What of the problem of maintaining fertility? That is of course, not only a matter of the prevention of erosion but also of rotations and manures, in fact, more so in the paddy lots. Here, as might be expected, a number of the Jaffna Tamils in the Iranamadu Colonies have something to teach the Sinhalese."

"The Jaffna Peninsula emerges from the scrutiny as a region of exceptional possibilities which contrasts strongly with the rest of the dry zone...... ...It is only fair to add, however, that the Peninsula owes much too, to the technical skill and industry of its Tamil inhabitants ——much of Jaffna is sandy or rocky and naturally dry and barren, and its possibilities, though exceptional, are,

"only realized by dint of much skill and labour"

"a Jaffna Garden is a delight to the European eye"

"It was only at Kilinochchi, it appears, that cow dung, compost, artificial manure and bone meal were all applied to paddy fields in 1951, here is a clear example of Jaffna Tamil Technology transferred from village to colony"

தமிழர் பயிர்ச்செய்கை முறையில், பெரும்பான்மைச் சாதியினரிலும் பார்க்க அதிகம் முன்னேறியிருந்தார்கள்; விவசாய பொருளாதாரம், நிலவளம் பேணுதல், முதலிய வற்றில் ஓரளவு நிபுணராகக் கருதப்படக் கூடியவர்கள் என்பதை எடுத்து விளக்கவே இம் மேற் கோள்களை எடுத்துக் காட்டினேன். தெற்கிலுள்ள பிரதேசங்களைப் போல் எங்கள் பிரதேசங்கள், கால நிலை மழை வீழ்ச்சி, தாவர வளம் முதலிய வற்றில் இயற்கையின் அருளைப் பெருவிடினும், முயற்சி, செய்திறன், சிக்கன வாழ்வு முதலிய எங்கள் மரபோடு இணைந்துள்ள பண்பாடுகளின் மூலம் இக்குறைவுகளைப் பூர்த்தியாக்கி நம் முன்னோரைப் போல் நாமும் வாழலாம் என்பதை விளக்க இன்னும் அதிகம் கூறவேண்டியதில்லை.

(தொடரும்)

கடிதம்

அன்புள்ள ஆசிரியருக்கு

கொழும்பு.
10 - 3 - 62

## சிக்கனமும் சேமிப்பும்

ஐயா,

இன்று நாம் இருக்கும் மிக இக்கட்டான சூல்நிலையில் சிக்கனமாக வாழவேண்டிய அவசியத்தையும் அவசரத்தையும் வற்புறுத்தி எழுதவேண்டியதில்லை.

திருவிழா, திருமணம் இறப்பு இவை போன்ற வைபவங்களுக்கு போகும் ஆடம்பர செலவு தவிர்க்கப்படவேண்டும் என்று பன்னிப் பன்னி பலகாலம் பேசியும் எழுதியும் வந்திருந்திருந்தும் நிலைமை திருந்தியதாகத் தெரியவில்லை. தொடர்ந்து பொருள் விரையம் நடந்துகொண்டு இருக்கிறது.

சிக்கனத்துக்கு பெயர் போனவர்கள் தமிழர்கள், என்ற கூற்றுக்கு நேர்மாறான முறையில் பலர் குறிப்பாக அரசாங்க சேவையில் உள்ளோர் நடந்து கொள்வது வருந்தத்தக்கது. யாழ் தேவியில் பயணம் செய்வோர் இந்த உண்மையை பிரத்தியட்சமாக கண்டுகொள்வார்கள்அதில்உள்ள உணவு விடுதியில் ஒரு பொழுது மட்டும் மது விற்பனை ஆயிரத்துக்கும் அதிமாக நடைபெறுவதாகச் சொல்லப்படுகிறது இதை யிட்டு நாம் ஒவ்வொருவரும் வெட்கப்படவேண்டும் தலைகுனிய வேண்டும்.

பொருள் வருவதுமட்டும் சம்பாத்தியம் அல்ல. வந்த பொருள் வறிதே போகாதிருப்பதுதான் உண்மையான சம்பாத்தியம். நமது உழைப்பில் எவ்வளவுக்கு எவ்வளவு சேமிக்க முடியுமோ அவ்வளவுக்கு அவ்வளவு சேமித்து ஒரு சிறு மூலதனத்தை உருவாக்க வேண்டும். அஃது பிற்காலத்தில் ஏதாவது ஒரு தொழில்துறைக்கு, கூட்டு முறையிலோ, தனிப்பட்ட முறையிலோ பயன் படுத்த உதவும்.

சிக்கனம் சேமிப்பு இன்னும் பல வருடங்களுக்கு எங்கள் தாரகமந்திரமாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இ. சிவசோதி

# எழுச்சி

1962-ம் ௵ மாசி—பங்குனித் திங்கள்


## நாளை - நமதே!

**இறந்த காலம்:-** ஏதோ வாழ்ந்தோம் என்று அரை குறை நினைவு.

**நிகழ்காலம்:-** எப்படியோ வாழ்ந்து கொண்டு இருக்கிறோம் என்ற தத்துவம் கலந்த சலிப்பு.

**வருங்காலம்:-** என்ன நேருமோ ? ஏதாகுமோ? எப்படி இருக்குமோ? என்ற விசாரம் ஏக்கம்.

அரசாங்க சேவையில் உள்ள பெரும்பான்மையான தமிழ்பேசும் ஊழியர்களது இன்றைய மனநிலையின் படப்பிடிப்பு மேலே நாம் கூறிய வாசகங்கள்.

இன்னும் இரண்டு ஆண்டுகள் கூட இல்லை, அதற்கிடையில் நாம் முன் எப்பொழுதும் எதிர் பார்த்திராத முக்கிய பிரச்சனைகளுக்கு முடிவு காண வேண்டியுள்ளது.

ஆனால் நாம் நினைப்பது போலவும், ஏங்குவது போலவும் வருங்காலம் உண்மையிலேயே இருள் அடைந்ததா? தொல்லைகள் சூழ்ந்ததா? துன்பம் நிறைந்ததா?

எங்களுக்கு கால்சட்டை உத்தியோகம்தான் சதமா? வேறு தொழிலே இல்லையா? வேறு வழியே இல்லையா?

தமிழினத்துக்கே சொந்தமான மூளைவளம், விடாமுயற்சி, சலியா உழைப்பு, சிக்கனம் சேமிப்பு இவற்றைப் பூரணமாகப் பயன்படுத்த உதவும் தொழிலா இந்தக் கால்சட்டை உத்தியோகம்?

எங்களில் எத்தனைபேர் தலைமுறை தலைமுறையாக இத்தொழில் பார்த்தோம்? சரிபாதிக்குமேல் கால்சட்டை உத்தியோகம் பார்ப்பது இதுதான் முதல் தலைமுறையல்லவா?

சரி, கால்சட்டை உத்தியோகம் தான் பார்க்கிறோமே - அதில் ஆயிரக்கணக்கில் சம்பாதித்து, காணி, பூமி வாங்கி பொருள் குவித்து குபேரர்கள் ஆனவர் எங்களில் எத்தனைபேர்? மேல் தளத்தில் உள்ள ஒரு சிலரைவிட மற்றவர்கள் கடனில் மூழ்காமல் வாழ்க்கை நடத்துவதே பிரமப்பிரயத்தனமாக இருக்கிறதல்லவா? அரசாங்கசேவையில் உள்ளோரில் எண்பது விழுக்காட்டுக்கும் அதிகமானோர் கடன் பளுவினால் தாக்குண்டு தவிப்பதாக புள்ளி விபரம் சொல்லும்பொழுது நாம் மட்டும் எப்படி அதற்கு விதிவிலக்காக முடியும்.

வாழ்க்கைத்தரமே (Standard of Living) அதல பாதாளத்தில் இருக்கும்பொழுது போதிய வருவாய், சேமிப்பு இவையெல்லாம் எட்டாக் கனிகள்தானே? அப்படியில்லாமல் இவற்றையும் மீறி எங்காவது சிறு சேமிப்பு இருக்குமென்றால், அஃது வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி வந்த சேமிப்பாகதானே இருக்கவேண்டும்?

மத்தியதர வர்க்கத்தினரதுசாபக்கேடே ஒருபக்கம் குறைந்த மட்ட வருமானம் (Low level of Income) மறுபக்கம் மென்னியை நெரிக்கும் விலைவாசி உயர்வு (Cost of living) பணவீக்கம் (Inflation) இவற்றின் கோரப் பிடியில் அகப்பட்டு வாழவும் முடியாமல், சாகவும் முடியாமல் தத்தளிப்பது தானே?

எனவே தொழில் என்றால், அது கால்சட்டை உத்தியோகம் ஒன்றையே குறிக்கும் என்ற மயக்கத்திலிருந்து நாம் முதலில் விடுபடவேண்டும்!

கால்சட்டைக்குள் தரித்திர நாராயணர்களாக உழன்றுகொண்டு காலம் கழிக்க விரும்புகிறோமேயொழிய, நாலு குழத்திற்குள் வெயர்வை சிந்தி பாடுபட்டு உழைத்து உயர மறுக்கிறோம்.

அரசாங்கசேவையாளரின் ஓட்டை ஒடிசல் எங்களுக்குத் தெரியாத ஒன்றா? சம்பளம் எடுத்த மறுநாளே பிச்சாண்டியாக மாறும் ரசவாத வித்தை யாருக்கும் தெரியாத பரம இரகசியமா? வெளுத்த உடுப்பு காலத்துக்கு வீட்டுக்கு வருவதற்கும் பிரயாணம் போவதற்கும் உள்ள தொடர்பு மற்றவர்கள் அறியா மூடுமந்திரமா? ஊருக்குப் போய் திரும்பும்பொழுது வீட்டில் கடன் வாங்காதவர்கள் உண்டா?

இந்தப் 'பூரண ஆயுசு நித்திய கண்ட' வாழ்க்கைக்கு நாம் யாரையும் குறை சொல்லவில்லை, குற்றம் காணவில்லை, காரணம் சூழ்நிலைக்குப் பலியானவர்கள்தான் நாம் எல்லோரும்.

மாத முடிவில் இருநூறோ முன்னூறோ வரும் என்ற நம்பிக்கை, 'கோழிமேய்த்தாலும் கோறணமேந்தில் மேய்க்கவேண்டும்' என்ற மதிப்பு, கௌரவம், அந்த மதிப்பும் கௌரவமும் ஒருநாள் கொண்டுவரும் சீதனம் சீர்வரிசை தம்பி

7-ம் பக்கம் பார்க்க

# நாளை நமதே

6-ம் பக்கத் தொடர்ச்சி

கொழும்பில் உத்தியோகம் என்று பெற்றோரும் உற்றாரும் ஊரில் பறை பறைய ஒரு வாய்ப்பு. எல்லாவற்றிற்கும் மேலாக அந்நிய அரசின் தேவையை பூர்த்தி செய்யுமாறு அமைந்த இந்த நாட்டின் தவறான கல்வித் திட்டம், அந்தத் தவறான கல்வி அமைப்பால் கல்லூரிகள் 'பேனா ஓட்டிகளை' ஆயிரக்கணக்கில் உற்பத்தி செய்யும் தொழிற் கூடமாக ஆகிவிட்ட பரிதாப நிலை. இன்னோரன்ன காரணங்கள்தான் தமிழ் இளைஞர்களை கால்சட்டை உத்தியோக வேட்டையில் இறங்கவைத்தன.

தமிழ் மக்கள் பலர் சிறிது காலத்துக்கு முன் கடல் கடந்து மலேயா சிங்கப்பூர் சென்றார்கள். வெள்ளிப் பணமாக உழைத்தார்கள், மிகக் குறுகிய காலத்தில் நல்ல ஓய்வுச் சம்பளத்தோடு செல்வந்தர்களாக ஊர் திரும்பினார்கள். கடல் கடந்துபோய் அவர்கள் கஷ்டப்பட்டு உழைத்தாலும் அதில் அர்த்தம் இருந்தது. ஆனால் நாம் இருநூறு முன்நூறு மைல் தொலைவில் வந்து எலி வளைகளுக்குள் வாழ்ந்து, ஒட்டல் சாப்பாட்டில் பாதிஉயிரை பறிகொடுத்து, இல்லாத வருத்தங்களை விலைகொடுத்து வாங்கி, உடல் நலம் கெட்டு, எடுக்கிற சம்பளம் முழுவதையும் இங்கேயே கொட்டி கொடுத்துவிட்டு, கண்ணை மூடுகிற காலத்தில் ஊர் போய் சேருகிறோமே. இந்த வாழ்க்கையில் நாம் கண்ட சுகம் என்ன ? சுவை யென்ன ?

எனவே இப்போது எங்களைவாட்டி வதைக்கும் பிரச்சனைகள், உத்தியோகத்தையே விட வேண்டிய கட்டாயம் தின்மைப் போர்வைக்குள் மறைந்துள்ள நன்மை என நாம் நினைக்க வேண்டியிருக்கிறது. நம்மை ''விரட்டுகிறவர்கள்'' தங்களை அறியாமலே எங்களுக்கு நன்மை செய்யப் போகிறார்கள். ஒரு வேளை இந்த உண்மையையே அவர்கள் இப்போது புரிந்து கொண்டால் அரசாங்க சேவையில் நீடித்து, கட்டாயப்படுத்தி எங்களை இருக்கச் செய்தாலும் செய்துவிடுவார்கள்!

யானைக்குத் தன்பலம் தெரியாதது போல எங்களுக்கு எங்கள் பலம் தெரிவதில்லை.

நம்மை நாமே புகழ்வதல்ல. மேல் நாட்டாரே எங்களது அறிவுக்கு, ஆற்றலுக்கு, உழைப்புக்கு நற்சான்று இதழ் வழங்கியுள்ளார்கள்.

'தமிழ் விவசாயின் தோட்டம் ஒவ்வொன்றும், மேலை நாட்டானுடைய கண்களுக்கு ஒரு நல் விருந்து' என்று யாரோ-எவரோ அல்ல, கேம்பிரிச்சு பல்கலைக் கழக புவியியல் பேராசிரியர் பாமர் (B. H. Farmer) இலங்கையை நேரில் பார்த்து விட்டு தான் எழுதிய 'இலங்கையின் கமத்தொழில்' என்ற நூலில் கூறியுள்ளார்.

நாம் வாழும் பகுதிகளில் உள்ள நிலவளம், நீர் வளம், கடல் வளம், கனி வளம், அறிவியல் அடிப்படையில் செம்மையாகவும்,சீராகவும்,முறையாகவும் பயன்படுத்தப்படல் வேண்டும். காடுகளனிகளாக வேண்டும், பாலை சோலையாக வேண்டும். வீட்டுக்கொரு கைத்தொழில், ஊருக்கொரு தொழிற்கூடம் உருவாக வேண்டும்.

மூலதனம் இல்லை, அரசாங்க உதவியில்லாதது மட்டுமல்ல, உபத்திரம் வேறு என்ற தோல்வி மனப்பான்மை வேண்டாம். முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை. முயற்சி திருவினையாக்கும். தேவைதான் கண்டுபிடிப்பின் தாய்.

''இலமென்று அசைகி இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்'' என்பது வள்ளுவன் சொன்ன பொய்யா மொழி.

எங்களை வாட்டும் பிரச்சனைகளை அண்மைக்கண் கொண்டு பார்க்காமல், தூரத்துக் கண்கொண்டு நோக்கி இன்னும் இருபது, முப்பது வருடங்களுக்குப் பின் நிலைமை எப்படி இருக்கும், இருக்கவேண்டுமென்று எடை போட்டு ஆராயுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இப்படி எழுதுவதன் காரணம் தாழ்வு மனப்பான்மையால் அல்ல. அல்லது ''போராட்டமே'' இல்லாது ''சரணாகதி'' யடைய எத்தனிக்கும் முயற்சியும் அல்ல. ''பறிக்கப்பட்ட'' உரிமைகளுக்கு ''போராடுவது'' வேறு. போராட்டத்தில் வெற்றி பெறாவிட்டால் அடுத்து என்ன செய்வது என்பது பற்றிச் சிந்திப்பது, திட்டம் தீட்டுவது வேறு, முன்னது வேறு, பின்னது வேறு. இரண்டும் வெவ்வேறு.

**தமிழினத்தின் வரலாற்றின் முக்கிய திருப்பு முனையில் நாம் இருக்கிறோம். வருங்கால வரலாற்றை உருவாக்கும் மகத்தான பொறுப்பில்-தூய்மையான தொண்டில் புனிதமான கடமையில் நமக்கும் பங்குண்டு.**

அந்தப் பொறுப்பை, தொண்டினை, கடமையை எது வரினும், என்ன நேரிடினும் செய்வோம். வெல்வோம். **நாளை நமதே!!**

# கிளைச் சங்கச் செய்திகள்

ஆரம்பக் கூட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்களின் பெயர்கள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன. தற்பொழுது சிலர் வேறு இடங்களுக்கும், அலுவலகங்களுக்கும் மாற்றலாகியுள்ளனர்.

**திருமலைக் கிளை** — ஆரம்பம்: 15-10-1961.

| | | | |
|---|---|---|---|
| தலைவர்:- | திரு. | *D. P. அண்ணாமலை | (கச்சேரி) |
| துணைத் தலைவர்:- | ,, | B. C. பாலசிங்கம் | (கடற்படை) |
| கௌரவ செயலாளர்:- | ,, | செ. சிவலிங்கம் | (கல்வி) |
| கௌரவ பொருளாளர்:- | ,, | P. பாலசிங்கம் | (கச்சேரி) |
| செயற்குழு உறுப்பினர்கள்:- | ,, | T. குலவீரசிங்கம் | (கமத்தொழில்) |
| | ,, | K. பஞ்சாட்சரம் | (கச்சேரி) |
| | ,, | V. நாகராசா | (காணிப்பகுதி) |
| | ,, | T. ருத்திரமூர்த்தி | (கடற்படை) |
| | ,, | C. முத்துலிங்கம் | (பொலிஸ்) |
| கணக்குப் பரிசோதகர்:- | ,, | K. செல்லையா | (கச்சேரி) |

* இவர் 5-1-62ல் நடைபெற்ற அடையாள வேலை நிறுத்தத்திற் கலந்து கொள்ள வேண்டுமென்று சங்கம் முடிவு செய்ததை ஆட்சேபித்து சங்கத்திலிருந்து விலகியுள்ளார்.

**வவுனியா கிளை.** — ஆரம்பம்:- 18-10-1961.

| | | |
|---|---|---|
| தலைவர்:- | திரு. | எஸ். கந்தப்பு |
| துணைத் தலைவர்.- | ,, | ரி. நமசிவாயம் |
| | ,, | எஸ். ஞானச் செல்வம் |
| கௌரவ செயலாளர்:- | ,, | தி. பா. பிரான்ஸிஸ் சேவியர் |
| துணைச் செயலாளர்:- | ,, | வீ. சுப்பிரமணியம் |
| கௌரவ பொருளாளர்:- | ,, | வி. செல்லத்துரை |
| துணைப் பொருளாளர்:- | ,, | கே. நேமிநாதன் |
| செயற்குழு உறுப்பினர்கள்:- | ,, | ஏ. ஜே. சந்தியாப்பிள்ளை |
| | ,, | கே. சண்முகநாதன் |
| | ,, | என். எஸ். நடராசா |
| | ,, | சி. பாலசிங்கம் |

**கொழும்பு துறைமுக அதிகார சபைக்கிளை.** — ஆரம்பம்:- 1-1-1962.

| | | |
|---|---|---|
| தலைவர்:- | திரு. | பொ. நவரத்தினம் |
| துணைத் தலைவர்:- | ,, | இ. வைரவிப்பிள்ளை |
| கௌரவ செயலாளர் | ,, | சி. விசயபாலன் |
| கௌரவ பொருளாளர்:- | ,, | வீ. நடராசா |
| செயற்குழு உறுப்பினர்கள்:- | ,, | ச. குமாரசுவாமி |
| | ,, | சு. தர்மலிங்கம் |
| | ,, | வே. ஆனந்தராசு |
| | ,, | ஐ. இராசதுரை |
| | ,, | த. இராமனுநாதன் |
| | ,, | ம. கனகராசா |
| கௌரவ கணக்குப்பரிசோதகர்:- | ,, | ஆ. சிவபாதம் |

**இரத்மலானைக் கிளை** — ஆரம்பம்:- 10-1-1962.

| | | |
|---|---|---|
| தலைவர்:- | திரு. | மு. கோ. சங்கரதாஸ் |
| துணைத் தலைவர்:- | ,, | வி. சுப்பிரமணியம் |
| கௌரவ செயலாளர்:- | ,, | வா. த. நடராசா |
| கௌரவ பொருளாளர்: | ,, | கா. கணேசரத்தினம் |
| செயற்குழு உறுப்பினர்கள்:- | ,, | வி. சிவஞானம் |
| | ,, | இ. சோதினாதன் |
| | ,, | க. வெற்றிவேலு |

# கைத் தொழில்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அவனைப்போல் பிறரும் அப்பொருள்களை வாங்க முயலுகின்றனர். அதனால் அப்பொருள்கள் பல சந்தைகளிலும் விற்பனையாகத் தொடங்குகின்றன. மக்களின் தேவைக்கேற்பஅப்பொருள்களையும் அதிகமாகஉற்பத்திசெய்யவேண்டியிருக்கின்றது. உற்பத்தித் தொழில்கள் அதிகரிக்க, அதிகமான கைத்தொழில் நிலையங்களும் அமைக்கப்படுகின்றன. இந்த முறையில் இக் கைத்தொழில் விரிவடைகின்றது. பல மக்கள் அதில் வேலைசெய்கின்றனர். இத்தகைய வளர்ச்சி கூட்டு வளர்ச்சி எனப்படும். இவ்வாறாகப் பல கைத்தொழில் நிலையங்கள் தோன்றுமாயின், மக்களுக்கு வேண்டிய பல பொருள்களும் உற்பத்தியாகின்றன. இதனால் அந்த நாட்டுக்கு வேண்டிய பொருள்கள் யாவும் அங்கேயே உற்பத்தியாகத் தொடங்குகின்றன. ஆகவே கைத்தொழில் அபிவிருத்தி ஒரு நாட்டைத் **தன்னிறைவு** உள்ளதாக்குகின்றது. விரைவான அபிவிருத்திக்குக் கைத்தொழிலை ஆதாரமாகக் கொண்ட நிலையங்கள் இருக்குமானால் இவையே சக்திவாய்ந்த காரணங்களாகின்றன. ஒரு நாட்டின் விவசாய வளர்ச்சி பெறக்கூடிய நிலத்தில் தங்கியுள்ளது. ஆனால் கைத்தொழில் நிலத்தின் அளவில் தங்கியிருப்பதில்லை. இயந்திரங்களை முற்றாகப் பயன்படுத்தாது ஓரளவுக்குத்தானும் பயன்படுத்தினாலும் அது கூடிய விளைவைத் தருகின்றது. அதனால் விவசாயத்தினின்றும் பெறக்கூடிய ஊதியத்திலும் கூடியளவு கூலியை ஒவ்வொரு தொழிலாளனும் பெறக்கூடியதாயிருக்கின்றது.

ஒவ்வொரு கைத்தொழிலுக்கும் இயற்கையான ஒரு வளர்ச்சி முறையுண்டு. இவ்வளர்ச்சி உள்ளூர் நிலைமையினாற் பாதிக்கப்படுகின்றது. குறித்த ஒரு பிரதேசத்தில் சில கைத்தொழில்கள் பிறவற்றிலும் பார்க்கமுன்னதாகவே அமைக்கப்படலாம். ஏனெனில் இக் கைத்தொழிலுக்குச் சிறப்பாக வேண்டிய வசதிகளை அப்பிரதேசத்தில் பெறக்கூடியதாயிருக்கலாம். வேறு சில கைத்தொழில்கள் உள்ளூர் வளங்களைப் பயன் படுத்தும். நல்ல கப்பல் துறைகளும் கப்பல் போக்குவரத்துவசதிகளும் உள்ள இடங்களில் பிற நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் மூலப்பொருள்களை அடிப்படையாகக்கொண்டு ஒரு கைத்தொழில் உண்டுபண்ணலாம். எங்கே அனுபவமும் தொழில் நுட்ப அறிவுமுண்டோ அங்கே உள்ளூரில் பெறக்கூடிய முதலையும் உள்ளூர் மனித பலத்தையும் கொண்டு அவற்றுக்கமைந்த ஒரு கைத்தொழிலைத்தொடங்கலாம். எங்கே தொழில் நுட்பத்திறனும் முதலுங்குறைவாயின் இவற்றைப் பிறநாடுகளினின்றும் பெறவேண்டியதாயிருக்கும். மிகப்பெரிய முயற்சிகள் இவ்வகைக்குட்பட்டவையாகும். கைத்தொழில்களிற் சில வகைகள் நாட்டின்அபிவிருத்தியைப் பெருக்கக்கூடியவையாய் இருக்குமென்பது அறிந்ததே. அதனால் ஒரு நாட்டுக்கு உகந்த கைத்தொழில் எவைஎனத்திட்டமிடும்பொழுது, இவ்வாறு நாட்டுக்குக் கூடிய பயன் தரக்கூடிய கைத்தொழில் எவை எனத் தேர்ந்துஎடுத்தல்வேண்டும். அன்றியும் ஒரு கைத் தொழிலினின்றும் பெறும் பயனையும் ஊதியத்தையும் திரட்டி மேலும் பல கைத்தொழில்வளர்வதற்கு ஏற்றதான பல வழிகாட்டி முறைகளையும் அமைத்தல் வேண்டும்.

சில பெரிய நாடுகளில் எரிபொருள், கனிப்பொருள், நீர், வலு, ஆகிய இயற்கை வளங்கள் இருக்கும். இத்தகைய நாடுகள் பெரிய கைத்தொழில்களான இரும்பு, உருக்கு, வளமாக்கி, சீமெந்து இயந்திரக்கருவிசெய்தல், போன்றவற்றைத் தொடங்குவதன் மூலம் கைத்தொழில்மயமாக்கும் முயற்சியில் இறங்குகின்றன. இவ்வாறான முதற்படி ஆக்கத்தினின்றும் இரண்டாம்படியான ஆக்கத் தொழில், இரும்பினாலும் உருக்கினாலும் செய்யும் பொருள்கள், இயந்திரங்கள், இரசாயனப் பொருள்கள், மருந்து வகைகள் முதலிய செய்பொருள்களை உற்பத்தி பண்ணுகின்றன. உள்ளூரிலே அத்தகைய பொருள்களை விற்பனை செய்யக்கூடிய வசதிகள் உண்டாயின் அவை பலவகைப்பட்ட உற்பத்திக்கு உறுதிப்பாடு அளிக்கின்றன; அதன் காரணமாய் மேலும் பல கைத்தொழில் வளர்ச்சியும் உண்டாகின்றது.

ஆனால் இத்தகைய ஒருஅபிவிருத்தித் திட்டம் எங்கள் நாட்டுக்கு ஏற்றதல்ல என்பது தெளிவானது. ஏனெனில் நாட்டுக்கு எரிபொருளுக்கும் வலுவுக்கும் வேண்டிய கரியோ எண்ணெயோ கிடையாது. எங்கள் இயற்கை வளமோ மிக அற்பமானது. பொது மக்களிடையே சேமிப்பு மிகக்குறைவு. அதன் காரணம் மக்களின் வருமானமும் மிகக் குறைவாயுள்ளதாகும். சேமிப்பு ஏதாவது உண்டாயினும் நிலத்தையோ வீட்டையோ வாங்குவதிலேயே அப்பணம் முதலீடு செய்யப்படுகிறது, ஏனெனில் இவை தக்க இலாபத்தைக் கொடுக்காவிடினும் கூடியளவு பாதுகாப்பை அளிக்கின்றன. கைத்தொழில் முதலீடு செய்வதென்பது புறக்கணிக்கப் பட்டுள்ளது. நீர் பெருவாரியாய் எங்கள் நாட்டில் இல்லை. அவை இருந்தாலும் பெரிய உற்பத்தி வேலைக்கு வேண்டியளவு நீர் கிடையாது. அன்றியும் அவை பருவங்களுக்கு ஏற்றவாறு சில காலங்களில் வற்றும், அல்லது பெருகும். இவ்வாறாக நீரின் அளவும் தன்மையும் எல்லாவகைத் தொழில் வேலைக்கும் ஏற்றவையாயில்லை. உற்பத்திப்பொருள்கள் விற்பனையாவதற்கு வேண்டிய உள்ளூர் சந்தையும் மிகச்சிலவே. கீழ் நாடுகள் பலவற்றுடன் ஒப்பிட்டுப் பார்த்தாலும், எங்கள் சந்தை வசதி மிகக் குறைந்தது.

இவ்வாறாக மூலதனம், அடிப்படை தேவைகள், மூலப்பொருள்கள், முதலியன அற்பமாக உள்ள எங்கள் சூழ் நிலைக்கு ஏற்ற ஒரு கைத்தொழில் விருத்தித் திட்டத்தை அமைத்தல் வேண்டும். இதை மேலும் விரிவு படுத்திக் கூறி, நாம் தொடங்கக் கூடிய கைத்தொழில்கள் எவையென்று அட்டவணைப்படுத்த

10-ம் பக்கம் பார்க்க

விளம்பரம்

# அஞ்சல் எழுது வினைஞர் சங்கம்

**பறிபோகிறது**

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் ஏழே ஏழு ஸ்தாபனங்கள் மாத்திரம் அஞ்சல் எழுது வினைஞரின் ஏகபோக உரிமையாகஇருந்தன. சொந்தக்கஷ்டங்கள் உள்ளவர்கள், அதாவது, நோய்வாய்பட்ட பெற்றோர்,இயலாதமனைவி குடும்பத்தில், அசம்பாவிதம், இவைகளைச் சமாளிக்கச் சொந்த இல்லங்கட்கு அண்மையில் கடமையாற்றக் கூடிய ஸ்தாபனங்களாக இவைகள் கருதப்பட்டன. உத்தியோக மொழிச்சட்டம் என்னும் சூருவளி இவற்றையும் அடித்துக்கொண்டு போகக்கூடிய அறிகுறிகள் காணப்படுகின்றன. தமிழ் அரசாங்க ஊழியர்களின் கஷ்டங்களுடன் அஞ்சல் எழுது வினைஞருக்கு இதுவும் ஒரு பெரும் பிரச்சினையாகி விட்டது.

அவ்விடங்களுக்கு மாற்றுவதென அறிவித்தல் கொடுக்கப்பட்ட சிங்கள ஊழியர் தங்கள் எதிர்ப்பைத்தெரிவித்தும் அரசாங்கம் நிர்ப்பந்தமாக இதைச்செய்ய எத்தனித்துள்ளது. வழக்கமாக அரசாங்க ஊழியருக்கு இல்லாத சலுகைகள் அவர்களுக்கு அழித்து வலுக்கட்டாயமாக அனுப்ப ஆவனநடை பெறுகின்றன. இவற்றுக்கு நாம் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் என்ன ?....

**சம்பள உயர்வு :-**

பல அங்கத்தவர்கள் தங்கள் சம்பள உயர்வு அளிக்கப்பட வில்லையென்று புகார் செய்துள்ளனர் இது தமிழ் அரசாங்க ஊழியர் அனைவரையுமே பாதிக்கும் ஒன்று. இது குறித்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தயாராகின்றன. அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் ஒத்துழைப்பை நல்கவேண்டுமென்று எதிர்பார்க்கிறோம்.

**மாபெரும் வெற்றி :-**

அஞ்சல் எழுதுவினைஞரைப் பொறுத்த மட்டில் உத்தியோக மொழி மூன்றும் படிவத்தேர்வுப் பரீட்சைக்கு எவருமே செல்லவில்லையென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம். இது எல்லோராலும் பாராட்டப்படவேண்டிய தொன்றென்று கூறின் மிகையாகாது.

விளம்பரம்

# தமிழ் அரசாங்க ஊழியர் சங்கம்

தமிழ் பிரதேசங்களில் பொருளாதார வளர்ச்சிக்காகப் பாடுபடுவதற்குத் தமிழ் மக்களை ஊக்கப்படுத்து முகமாக கொழும்பில் புதன்கிழமை தோறும் தமிழ் அரசாங்க ஊழியர் சங்கம் கூட்டங்கள் நடத்துகின்றது. இக்கூட்டங்களில் ஒவ்வொரு துறையிலும் விசேட தகைமை பெற்றவர்கள் சொற்பொழிவாற்றுகின்றனர்.

2. ஏதாவது ஒரு தொழிலில் முதலீடு செய்ய விரும்புபவர்கள் பின்வரும் விபரங்களை அறிவித்தால் அத்தொழிலில் அனுபவமுள்ள அல்லது அறிவுரை கூறத்தகைமை பெற்ற ஒருவரிடம் அவர் அறிவுரை பெறஒழுங்கு செய்யப்படும்.

1. முழுப்பெயர்
2. முகவரி
3. வடக்கு கிழக்கு மாகாண முகவரி
4. முதலீடு செய்ய விரும்பும் தொழில்
5. முதலீடு செய்ய விரும்பும் பணம்
6. முதலீடு செய்ய விரும்பும் இடம்

3. அரசாங்க எழுது வினைஞர் சங்கம் அரசாங்கத்துக்கு எதிராக எடுக்கும் சட்ட நடவடிக்கைகளுக்குப் பண உதவி புரியும்படி உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்ளவேண்டுமென தமிழ் அரசாங்க ஊழியர் சங்க ஆட்சிக்குழு தீர்மானித்திருக்கின்றது. அதற்காகிய படிவங்கள் உறுப்பினர்கள் பணம் சேர்ப்பதற்காக அனுப்பப்படும்.

இ. நாகேந்திரம்
பொதுச் செயலாளர்

## கைத் தொழில்

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

மானவையென்றாலும் அவை என்னென்ன என்று அறிந்த பின் தான் கைதொழில் ஏதாவற்றிலும் இறங்கலாம்.

எங்கள் நாட்டின் கைதொழில் வளர்ச்சிக்கு அடிப்படையான இயற்கை வளங்கள் என்ன? எங்கள் கனிப்பொருட்செல்வங்கள் என்ன? வலுப்பெறுவதற்குள்ள மூலங்கள் என்ன? நாம் பெறக்கூடிய மனித வளங்கள் யாவை? அவர்களின் திறனும் வேலையளவும் எவ்வளவாகும்? அவர்களின் அனுபவமும், தொழில் நுட்பத்திறனும் எவ்வளவு? ஒவ்வொரு மூலவளத்தையும் தொகுதி தொகுதியாக ஆராயும்போது அவற்றின் நலங்களையன்றித் தீமைகளையும் ஆராய்தல் அவசியமாகின்றது இவையாவற்றையும் அடுத்த கட்டுரையில் தெளிவாக ஆராய்வோம்.

(தொடரும்)

## செயலாளரின் ...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைஎடுக்கப்படுகிறதென 19-12-61ல் பதில் கிடைத்துள்ளது.

சிங்கள ஊழியர் வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கனுப்பப்படுவது பற்றிய திறைசேரிச் சுற்று நிருபம் பாரபட்சமானதெனக்கண்டித்து அதை வாபஸ் பெறும்படி 2-11-61ல் திறைசேரிச்செயலாளருக்கெழுதினேம். அவர் 23-11-61ல் அளித்த பதில் திருப்தியளிக்காமையால்மீண்டும் 20-12-61ல் எழுதியுள்ளோம்.

55 வயதிற்கு மேற்பட்டோரின் சேவை நீடிப்பிற்குச்சிங்களத் தேர்ச்சி வேண்டுமென விதிக்கும் 555ம் இலக்கச் சுற்றறிக்கையை உடனே வாபஸ் பெறும்படி நிதி அமைச்சருக்கெழுதப்பட்ட அஞ்சல்,உரிய நடவடிக்கைக்காக நிதி அமைச்சருக் கனுப்பப்பட்டிருப்பதாகப் பதில் கிடைத்துள்ளது.

காணி வாங்குதற்கோ அல்லது அதுபோன்ற வேறு தேவைகளுக்கோ; அரசாங்கத்திடமிருந்து ஊழியர் பெற்ற கடன் முழுவதையும் அவர்கள் இளைப்பாறும் பொழுது பெரும் தொகுத்த ஒய்வு வேதன (Commuted pension)த்திலிருந்து கழிக்கும் தற்போதைய முறையை மாற்றி மாதாந்த ஒய்வு வேதன (Pension) த்திலிருந்து மாதாமாதம் கழித்தல் வேண்டுமென 28-11-61ல் திறைசேரிக்கெழுதினேம். அதனைத் தொடர்ந்து நடை பெற்ற கடிதப் போக்குவரத்தின் இறுதியில், இப்படியான கஷ்டங்கள் யாருக்காவது ஏற்படும் போது உடனே தங்களுக்கு அறிவிக்கும்படியும் அதற்குத் தாங்கள் வேண்டிய ஒழுங்குகள் செய்வதாகத் திறைசேரியிலிந்து 20-3-62-ல் பதில் கிடைத்துள்ளது. ஆகவே இப்படியான கஷ்டங்கள் ஏற்படும் பொழுது உறுப்பினர்கள் சங்கத்துடன் தொடர்பு கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

இடமாற்றம் செய்யப்படும் ஊழியருக்குத் தளபாடங்கள் கொண்டு செல்ல வழங்கப்படும் படி (Allowance) யில் தற்காலிகமாகக் கொடுபட்ட உயர்வை நிரந்தரமாக்க வேண்டுமெனத் திறை சேரிக்கெழுதியுள்ளோம். இவ்விடயம் கவனத்துக் கெடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது என்று பதில் கிடைத்துள்ளது.

11-12-61-ல் நீதி அமைச்சருக்கெழுதிய 24-9-56 க்குமுன் சேவையிற் சேர்ந்தோர் பற்றிய கோரிக்கைகளடங்கிய அஞ்சலின் வாசகம் எமது 4ம் இலக்கச் சுற்று நிருபத்தில் தரப்பட்டுள்ளது.

13-12-61-ல் அரசாங்க ஊழியரின் நியமனக்கடிதங்கள், இடமாற்றக் கட்டளைகள், சம்பளப் பட்டியல்கள் முதலியன அந்தந்த ஊழியர் கடமையாற்றும் மொழியிலேயே இருக்கவேண்டுமென நீதி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக் கெழுதியுள்ளோம்.

24-9-56 க்குபின் சேவையிற் சேர்ந்தோர் பற்றிய கோரிக்கைகள் 24-12-61-ல் அனுப்பப்பட்டன. அவ்வஞ்சலின் வாசகத்தை எமது 5-ம் இலக்கச் சுற்றறிக்கையில் காணலாம்.

இராணுவத்தினரையும் துறைமுகத் தொழிலாளரது வேலை நிறுத்தத்தை முறியடிக்கப் பயன்படுத்துவதைக்கண்டித்தும்பிரதம மந்திரி, தொழிலமைச்சர் ஆகியோருக்கு 26-12-61-ல் எழுதினேம்.

26-12-61-ல் பிரதமமந்திரி, நிதி அமைச்சர், நீதி அமைச்சர் ஆகியோருக்கு விடுக்கப்பட்ட எமது ஏழு குறைந்த பட்ச கோரிக்கை களடங்கிய நிருபத்தின் வாசகமும் எமது 5-ம் இலக்கச் சுற்றறிக்கையில் தரப்பட்டது.

### அடையாள வேலை நிறுத்தம்

சென்ற ஆண்டின் இறுதியில் துறைமுகத் தொழிலாளரின் வேலைநிறுத்தத்தை முறியடிப்பதற்கு இராணுவத்தை அரசாங்கம் உபயோகப்படுத்தியமை எல்லோருக்கும் தெரிந்ததே. இதனை ஆட்சேபித்து அடையாள வேலை நிறுத்தம் செய்வதற்கு அரசாங்க சேவைச்சம்மேளனம் (P. S. L.) அதனைச் சார்ந்த தொழிற் சங்கச் சம்மேளனங்களுடனும், தொழிற் சங்கங்களுடனும் ஆலோசித்து வருவதாகப் பத்திரிகைகள் மூலம் அறிந்தோம்.

அந்த நேரத்தில் சங்கம் என்ன செய்ய வேண்டும் மென்று முடிவு செய்வதற்காக 31-12-61ல் ஓர் செயற்குழுக் கூட்டம்கூட்டப்பட்டது. அன்று வெளியிடங்களிலும் மற்றும் அலுவலகங்களிலும் உள்ள உறுப்பினர்களின் அபிப்பிராயங்களைச் செயற்குழு உறுப்பினர்கள் மூலம், பிரதிநிதிகள் மூலம்அறிந்து, சங்கத்துக்கு ஓர் அழைப்பும் கிடைக்காதபடியாலும், மற்றத்தொழிற்சங்கங்கள், சங்க உறுப்பினரைப் பாதிக்கும் அதிமுக்கிய பிரச்சினைகளிற் கவனம் செலுத்தாத படியாலும், அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதில்லை யென்று முடிவு செய்தது. தங்கள் பிழையை உணர்ந்த தொழிற்சங்க சம்மேளனங்கள் 3-1-62ல் ஓர் அழைப்பு விடுத்திருந்தனர். அவ்வழைப்பின் பேரில் செயற்குழு கூடி தொழிற் சங்க நலனை முன்னிட்டு அடையாள வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்வதாக முடிவு செய்தது. ஆனல் ஒரு பொது வேலைநிறுத்தத்தில் பங்கு பற்றுவதாயிருந்தால், எங்கள் உறுப்பினரைப் பாதிக்கும் பிரச்சினையான சிங்களத் தேர்ச்சி பற்றி அவர்களின் நிலையைத் தெளிவு படுத்த வேண்டு மென்று கேட்டு கொண்டோம். இதற்கு இதுவரை ஓர் பதிலும் கிடைக்கவில்லை.

அன்று தந்திகளும் தணிக்கை செய்யப்பட்டிருந்தமையால் சில இடங்களுக்கு நேரத்திற்கு எங்கள் முடிவை அறிவிக்க முடியவில்லை. இப்படி நடைபெற்றதற்குப் பொறுப்பு தொழிற் சங்க சம்மேளனங்களேயாகும். மிகக்குறுகியகாலத்தில் எவ்வளவு செய்யமுடியுமோ அவ்வளவும் செய்துள்ளோம். நிறைவேற்று வகுப்பு தரம் 11க்குரிய தேர்வின் முடிவை உடனடியாக வெளியிடும் படியும் தரம் 1ல் உள்ள வெற்றிடங்களை நிரப்பும் படியும் திறைசேரிப் பிரதிச் செயலாளருக்கு 6-4-62ல் எழுதியுள்ளோம்.

'பாதுகாப்பு' என்று காரணங் காட்டி வடகீழ்மாகாணங்களிலிருந்துவெளியிடங்களுக்கு மாற்றப்பட்ட எங்கள் சங்க உறுப்பினர்களை உடனே பழைய இடங்களுக்கு திரும்பவும் மாற்றும்படி 10-4-62ல் திறைசேரிப் பிரதிச் செயலாளருக்கு எழுதியுள்ளோம். அத்துடன் அது பற்றிய குறிப்புகளை அவர்களின்

14-ம்பக்கம் பால்க்க

# மனம்போல் மாங்கல்யம்

(சென்ற இதழின் தொடர்)

அந்த வாலிபனை ஒருநாள் நான் கண்டேன், ஒரு சில நிமிடங்கள் பார்த்தேன். அவ்வளவேதான். ஒரு வார்த்தைதானும் அவருடன் கதைக்க முடியவில்லை. ஆனல் என் உள்ளம் அவரையே எண்ணி ஏங்கிக்கொண்டிருக்கிறது. அவருடன் பலகாலம் நெருங்கிப் பழகியது போன்ற ஒரு உணர்ச்சி உள்ளத்தில் மிகுந்திருக்கின்றது. என்ருவது ஒருநாள் அவரைக் காண்பேன், என்ற நம்பிக்கை மேலும் என்னைப் படிக்கத்தூண்டியது. ''படிப்புத் தானே பெண்களின் திருமணத்தை நடத்தும் ஒரே சாதகம்'' என் படிப்பு எண்ணத்தை என் பெற்றவர்கள் எதிர்த்தாலும் தடுக்கவில்லை.

கலாசாலை வாழ்வு எனக்கு மிகவும் பிடித்திருந்தது. விபரம் அறிந்த நாட்தொடக்கம் மகளிர் கல்லூரியில் படித்த எனக்கு கலாசாலையில் ஆண்களும் பெண்களும் நெருங்கிப் பழகியதைபோல் பழக முதலில் கூச்சமாக இருந்தது. நாட்செல்லச் செல்ல எல்லாம் சகசமாய்விட்டது. பல தரப்பட்ட மாணவர்கள் அங்கு பயிற்சிபெற்ருர்கள். பதினெட்டு தொடக்கம் முப்பத்தைந்து வயது வரை மாணவர்கள் இருந்தார்கள். எல்லோரும் ஒவ்வொரு போக்கு, ஒவ்வொரு கொள்கை, குறிக்கோள், அத்தனைக்கும் இடையில் வேற்றுமையில் ஒற்றுமை. நாம் ஒரு குடும்பத்தவர்கள் போல் வாழ்ந்தோம்.

கலாசாலையில் என்னைக்கவர்ந்தவர் சிவானந்தம். சுமார் இருபத்திநான்கு வயது இருக்கும், கறுத்த அழகற்ற உடல், முகத்தில் எந்தக்கவர்ச்சியும் இல்லை. படிப்பில் மிகவும் கெட்டிக்காரராக இருந்தார். தாம் சிரிக்க மாட்டார், மற்றவர்கள் விழுந்து விழுந்து வயிற்றை இறுகப்பிடித்துக்கொண்டு குலுங்கிக் குலுங்கிச் சிரிக்கக்கூடியதாக சிரிப்பூட்டுவார், ஓய்வுநேரங்களை நிமிடந்தானும் வீணுக்கமாட்டார், கவிதைகள் எழுதுவார், கதைகள் கட்டுரைகள், ஏன் உயர்ந்த கலை நயம்மிளிரும் இயற்கை ஓவியங்களும் தீட்டுவார். அவருடன் பேசுவதே தனி இன்பம். அண்ணு என அழைத்து அன்புடன் நெருங்கிப் பழகினேன். எமது பழக்கத்தை மற்றவர்கள் தவருகப் புரிந்து கதைக்கவும் செய்தார்கள்.

ஒருநாள் ''பவானி, நீர் என்னுடன் நெருங்கிப் பழகுவதை மற்றவர்கள் தவருக எண்ணிவிட்டார்கள், நான் திருமணம் செய்தவன், ஒரு குழந்தைக்குத் தந்தை, அப்படியிருக்க இவர்கள் இப்படி கதைக்கிருர்கள். படித்தவர்கள் பண்போடு நடக்காது தாமும் கெடுவதோடு மற்றவர்களையும் கெடுத்துவிடுகின்ருர்கள்'' என்ருர்.

''அண்ணு எனக்கு உடன்பிறந்தவர்கள் இல்லை. நீங்கள் என் உடன்பிறவாத அண்ணர், நாம் களங்கமற்றவர்களாக இருக்கும் போது எதற்காக மற்றவர்களை யிட்டு கவலைப்படவேண்டும்?'' என்றேன். இதன்பின் அவர் என்னுடன் பழையபடி நெருங்கிப் பழகினுர்.

''பாவம் நாடு முன்னேற பொருளாதாரம் பெருக வேண்டும், பொருளாதாரத்தின் பிறப்பிடமே கிராமம், அந்தக் கிராமம் எந்தவித முன்னேற்றமும் இன்றி ஒரே நிலையிலே இருக்கின்றது. கிராமத்தில் இருந்து பல மாணவர்கள் பட்டணம் சென்று படிக்கின்ருர்கள், இவர்களால் எமது கிராமம் பெருமையும் உயர்ச்சியும் அடையும் என்று பெற்றவர்கள் கனவு காண்கின்ருர்கள். கனவு கனவாகவே போய்விடுகின்றது. படிப்பு முடிந்ததும் தங்கள் படிப்புக்கு பயன் - பதவி பட்டணத்தில்தான் என படித்த வாலிபர்களும் யுவதிகளும் பட்டணம்சென்று உழைத்து உல்லாச வாழ்வில் ஊதாரித்தனமாக பணத்தைப் பாழாக்கி வாழ்வில் எந்த உயர்வு தானும் அடையாது மற்றவர்களும் உயர்வடைய உதவாது வாழ்வில் இருந்து 'றிட்டயராகி' விடுகின்றனர். இதனல் கிராமம் என்றும் படித்தவர்கள் இல்லாத, பழமையில் ஊறிய, மூடக்கொள்கைகள் நிறைந்த வேண்டாத பழக்கவழக்கங்களில் அழுந்தி உயர்வுகாணுது உழுத்துக்கொண்டே போகின்றது. படித்த மாணவர்கள் தங்கள் படிப்பை தம் கிராம உயர்விற்குப் பயன் படுத்தினல் இன்று எமது கிராமம் மற்றவர்கள் உதவியை எதிர்பாராத பொருளாதார ஏற்றம் - நிறைவுகொண்டதாக அமைந்திருக்கும்'' அவரின் அன்றய கூற்று என் உள்ளத்தில் நிதமும் ஒலித்தது. கிராமத்தில் என் வாழ்வு அமைய வேண்டும் என்று முடிவு செய்து கொண்டேன்.

இப்போது ஒரு வருடத்துக்கு முன் கண்ட தோற்றம் என் இதயத்தில் அடிக்கடி தோன்றி என் நிம்மதியைக் கெடுத்துக்கொண்டிருந்தது. அவர் இன்று எங்கே இருக்கிருர்? என்ன செய்து கொண்டிருப்பார்? ஒருவேளை அவருக்கு திருமணமே நடந்திருக்கக்கூடும். இப்படி எண்ணி ஏங்கும் என்னுல் இதற்குமேல் எண்ண முடியவில்லை. என் இதயத்தில் ஏக்கம் அதிகரித்துக் கொண்டே இருந்தது. உறக்கத்தில் தேக்கம், உணவில் வெறுப்பு, படிப்பில் அசிரத்தை, மாற்றத்துக்குக் காரணம் எனக்குப் புலப்படவில்லை.

13-ம் பக்கம் பார்க்க

## மனம்போல் மாங்கல்யம்

12-ம் பக்கத் தொடர்ச்சி

எதிர் காலத்தைப்பற்றி என்னுல் அடிக்கடி சிந்திக் காமல் இருக்கமுடியவில்லே. ''என் வாழ்வை கிராமத் திலேயே வாழ்ந்து முடிக்க வேண்டும், என்னுல் சிலரா வது பலன் பெற வாழ வேண்டும், படித்தவர்கள் பலர் முயன்று முயற்சி செய்தால்தான் கிராமம் முன்னேறும், பொருளாதா ரம் உயரும்'' இப்படி எண்ண எண்ண இரண்டு வருடங்களுக்கு முன், மூன் று மாதங்கள் உருத்திரபுர த்தில் விடியாமல் விடிந்த காலேகளும், போகாமல் போன மாலேகளும் நினே விற்கு வந்தன. அன்று பவானி எந்த எண்ணமும் குறிக்கோளும் இன்றி பட் டாம் பூச்சியாக வாழ்ந்த வள். இன்றைய பவானி இப்படித்தான் வாழவேண் டும் என்று முடிவு செய்து அந்த முடிவைச் செயலாக் கத் துடிப்பவள்.

பயிற்சி முடித்து வெளி வந்த எனக்கு நான் பிறந்த மீசாலேக் கிராமத்தில் ஒரு பாடசாலேயில் இடம் கிடைத்தது. அந்த இடம் கிடைப்பதற்குத்தான் எத் துணைப்பாடு? முகாமைக்கா ரருக்கு மூன்று வருடங்கள் வெயில்-மழை பாராது உழைத்ததின் பயனுக நெல் விற்ற ரூபா 2500ம் பாடசாலேக் கட்டிட நிதி என்ற பெயரில் அதிபருக்கு 1500/: தாரைவார்த்த பின்புதான் கிடைத்தது.

பாடசாலேயில் பள்ளிச் சிறுவர்களுடன் இருக்கும் பொழுது கலகலப்பாகவும் அமைதியோடும் இருக்க முடிந்தது. பள்ளிக்கூடத் தால் வீடு சேர்ந்தால் ஒரே அலுப்பும் சலிப்பும் தான். வீட்டில் வேலே எதுவும் செய்வதற்கோ ''பெரி யாச்சி'' விடமாட்டா. வீட்டில் வேலே இல்லாமல் எத்தனேநாட்களுக்கு இருக் கமுடியும்?. வர வர மீசாலே வாழ்வு எனக்கு கசப்பையும், சலிப்பையும் தந்தது. அமைதியான முயற்சியால் உயற்சிய டைந்த மக்களேயும் மாம ரச்சோலேகளேயும் பலா மரத் தோட்டங்களேயும் நிறையக்கொண்ட கிரா மம்தான்மீசாலே. இருந்தும் மீசாலேயால்எனக்குத்திருப் த்தியையும் நிம்மதியையும் தர முடியவில்லே. போதாத தற்கு வேலுப்பிள்ளே அத் தான் கிழமை விட்டு கிழ மை கொழும்பில் இருந்து வந்து இருந்த கொஞ்ச நஞ்ச நிம்மதியையும் குட் டிச்சுவராக்கி வந்தார்.

''பெண்ணிற்கு பிறந்த வீட்டில் அன்பும் பாசமும் கொண்ட பெற்றவர்கள் வாழ்விற்கு வேண்டிய சகல வசதிகளும் நிறைய இருக் கலாம் எனினும் அவள் புகும் இடத்தில்தானே வேண்டிய இன்பத்தையும், பெருமையையும், உரிய மதிப்பையும் அடைய முடியும்'' நானும் பிறந்த வீட்டையோ கிராமவாசத் தையோ விட்டுப் புகும் இடத்திற்கு போக வேண் டியவள்தானே. இந்த எண் ணம் வலுக்க வலுக்க மூன் ருண்டுகளுக்கு முன்பு கண் ட காட்சி நினேவுத் திரை யில் காட்சி தந்தது. அந்த இனிய காட்சி இன்னமும் என் இதயத்தில் பசுமை யாகவே இருந்தது.

மீசாலேப்பாடசாலே உத்தி யோகத்தை இராசிநாமாச் செய்துவிட்டு உருத்திரபு ரம் மிசன் பாடசாலேயில் ஆசிரியையாக இடம் எடுத் தேன். மூன்று வருடங்க ளுக்கு பின்பு முதல் முறை யாக உருத்திரபுரம் சென் றேன்.

எத்தனே மாறுதல்கள் நம் பமுடியாத அளவிற்கு. நம் பதானே வேண்டும். கண் முன் பிரத்தியட்சமாகத் தென்படும் உண்மைகளே யும் எப்படி நம்பத் தயங் குவது! காடாய் கிடந்த உருத்திரபுரம் களனியா கக் காட்சி தந்தது. கல்லும் கள்ளியும் மண்டிக்கிடந்த நிலம் நெல் விளேயும் தாய் மை நிலமாக காட்சி கொ டுத்தது. எங்கும் ஒரே பசுமைக் கோலம்; ஈழத் தில் விளே நிலங்கள் எல்லாம் இதே பசுமைக் கோலம் கொள்ளுமேயானுல்?... முன்பு சிறு ஓலேக் குடிசை களாக இருந்தவைகள் இன்று கல்லால் கட்டப் பட்டு ஓட்டால் வேயப் பெற்றிருந்தது. வீட்டைச் சுற்றி வாழை, முருங்கை வற்ருலே போன்ற மரங் களும் கொடிகளும் ஏராள மாகக் காட்சிதந்தன.

(அடுத்த இதழில் முடியும்)

கோழிப் பண்ணை அமைப்பதற்குத்
தேவையான
சகல கட்டிடச் சாமான்களும்
எங்களிடம் கிடைக்கும்.

நா. வைத்திலிங்கம் குழு (வரை)
38, 3-ம் குறுக்குத் தெரு,
450, பழைய சோனகத் தெரு,
கொழும்பு.


## செயலாளரின் . . .

11-ம் பக்கத் தொடர்ச்சி

அந்தரங்க சேவைச் சுவடிகளிலிருந்து அகற்றவேண்டும். அல்லது அவர்கள் மீதுள்ள குற்றச்சாட்டுகளிலிருந்து தப்பித்துக் கொள்ள அவர்களுக்குச் சந்தர்ப்பம் அளிக்கப்படல் வேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளோம்.

## தொண்டர் தேவை.

சங்கத்தின் நிதி ஆண்டு முடிவடைந்துள்ளதால் செய்து முடிக்கப்பட வேண்டிய வேலை நிறைய உள்ளன. அவற்றைப் பூர்த்தி செய்வதற்குத் தொண்டர்களின் உதவியை நாடி நிற்கிறோம். ஆர்வம் மிக்க உறுப்பினர்களைக் கிழமை நாட்களில் மாலை 5.00 மணிக்குப் பின் அலுவலகத்திற்கு வந்து உதவி செய்யுமாறு தயவாக வேண்டுகிறோம்.



உறுதிக்கும் நீடியகால பாவனைக்கும்
உத்தரவாதமுள்ளது.

உங்கள் பணத்திற்கு பெறுமதிவாய்ந்தது
சீபர்லிங் டயர்
SEIBERLING TYRE

ஏக விநியோகஸ்த்தர்கள்:

A. S. S. சங்கரலிங்கம் பிள்ளை அன் கோ., லிமிட்.
தபால் பெட்டி நிர். 435,
136, பஞ்சிகாவத்தை றேட், கொழும்பு—10.
போன்: 4491. தந்தி: ''டயர் டியுப்''

அரசாங்க எழுது வினைஞர் சங்கத்திற்காக கொழும்பு 13, வாசல றேட், டொமினியன் அச்சகத்தில் அச்சிடப்பட்டு பிரசுரிக்கப்பட்டது.